**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**MCOP.NO.412/2017**

| | | |
|---|---|---|
| **NAME** | : | சுலைமான் |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 02.09.2022.**

4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் தெரியும். என் அப்பாவின் வயதைக் காண்பிக்க ஆதார் கார்ட் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை, வீட்டில் இருக்கும். என் தகப்பனாரின் மாத வருமானத்தைக் காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பழைய இரும்புச் சாமானை மொத்தமாக வாங்கி வெளியே விற்பார் என்றால் சரி. இங்கு வாங்கிக் கொண்டுபோய் பெங்களூரில் சென்று பெரிய வியாபாரியிடம் விற்பார் என்றால் சரி. சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் சரி. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சி அளிக்கிறேன். விபத்திற்கு முழு காரணம் டாடா ஏஸ் TN-23-BJ-0615 என்றால் சரி. அதில்தான் என் அப்பா பயணம் செய்தார். என் அப்பா இங்கிருந்து சாமானை அந்த வண்டியில் ஏற்றி பெங்களூரில் இறக்கிவிட்டு வேறு சாமானை ஏற்றிக்கொண்டு திரும்ப வந்துகொண்டிருந்தார் என்றால் சரி. வாடகை போய்விட்டு வருவதற்கு தான் பேசியிருந்தார் என்றால் சரி. நிறைய தடவை இந்த வண்டியில்தான் போவார். டாடா ஏஸ் வண்டியின் டிரைவர் விபத்தை ஏற்படுத்திவிட்டார் வந்து பாருங்கள் என இன்ஸ்பெக்டர் சொன்னார். பிரமாண வாக்குமூலத்தில் விபத்தின் முழு விவரத்தை குறிப்பிட்டுள்ளேன். கண்டெய்னர் மீது தவறு என முதல் தகவல் அறிக்கையில் காட்டப்படவில்லை என்றால் கண்டெய்னர் ரோட்டில் நின்றது, டாடா ஏஸ் வண்டி மோதிவிட்டதாக இன்ஸ்பெக்டர் கூறினார். முதல் தகவல் அறிக்கையில் ரோட்டின் ஓரமாக நிறுத்தியிருந்த கண்டெய்னர் லாரி மீது டாடா ஏஸ் வாகனம் பின்னால் மோதி விபத்து ஏற்படுத்தியதாக காட்டப்பட்டுள்ளது என்றால் அதில் காட்டப்பட்டுள்ளது ஆனால் ரோட்டில் நிறுத்தியிருந்ததாக

சொன்னார்கள். கண்டெய்னர் லாரி சிக்னல் போடாமல் நின்றிருந்ததாக சொல்லவில்லை என்றால் தெரியாது. டாடா ஏஸ் டிரைவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார், என் அப்பாவும் இறந்துவிட்டார். அவர் மீது போடப்பட்ட வழக்கு முடிக்கப்பட்டது என்றால் தெரியாது. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ கொடுக்க வேண்டும் என பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரி. சட்டப்படியும் சங்கதிப்படியும் 4ம் எதிர்மனுதாரர் பொறுத்து இந்த நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரும், அவர் காப்பீட்டு நிறுவனமும் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ தொகை கொடுக்க வேண்டுமென பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரி.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.